## இணையதள அறிவிக்கை

**ந.க.எண். 4351/2022/அ1**
**நாள்: 15.11.2023**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**
**திருவாரூர் மாவட்டம்**
**கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம்**
**அறிவிக்கை (Notification)**

**ஒன்றியத் தலைப்பு ஈப்பு ஓட்டுநர் / அலுவலக உதவியாளர்**
**பணியிடம் நேரடி நியமனம்**

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஒன்றியத் தலைப்பில் ஏற்பட்டுள்ள ஈப்பு ஓட்டுநர்/ அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான/ விண்ணப்பதாரர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | காலிப் பணியிட விவரம் | எண்ணிக்கை | இனசுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு ( urn) | வயது (01-07-2023 அன்று) |
|---|---|---|---|---|---|
| 1. | ஈப்பு ஓட்டுநர் | 1 (ஒன்று) | ஆதிதிராவிடர் (அருந்ததியினர் முன்னுரிமை அடிப்படையில்)– முன்னுரிமை பெற்றவர் | பெண்கள் – ஆதரவற்ற விதவை | 18 வயது பூர்த்தி அடைந்தும் 37 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| 2. | அலுவலக உதவியாளர் | 1 (ஒன்று) | ஆதிதிராவிடர் (அருந்ததியினர் முன்னுரிமை அடிப்படையில்)– முன்னுரிமை பெற்றவர் | பெண்கள் – ஆதரவற்ற விதவை | 18 வயது பூர்த்தி அடைந்தும் 37 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |

**கல்வி மற்றும் பிற தகுதிகள்:-**

**ஈப்பு ஓட்டுநர்**

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
- மோட்டார் வாகன சட்டம் 1988–இன்படி, தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.
- வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் நடைமுறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**அலுவலக உதவியாளர்**

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர் திருவாரூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- அரசாணை (நிலை ) எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை நாள் 16–02–2021–இன்படி நியமனம் செய்யப்படுவார்கள்.
- ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு நிலை–8 (19500-62000) என்ற ஊதிய தொகுப்பில் ஊதியம் மற்றும் பிற தகுதியாக படிகள் வழங்கப்படும்.
- அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு நிலை–1 (15700-50000) என்ற ஊதிய தொகுப்பில் ஊதியம் மற்றும் பிற தகுதியாக படிகள் வழங்கப்படும்
- விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்று, வகுப்புச் சான்று மற்றும் முன்னுரிமைச் சான்று நகல்கள் சுய கையொப்பமிட்டு இணைக்கவேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்று நகல்களுடன் ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொரடாச்சேரி என்ற முகவரிக்கு நேரடியாகவோ பதிவஞ்சல் மூலமாகவோ 11-12-2023 மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைத்திட வேண்டும்.
- நேர்காணல் நடைபெறும் நாள், இடம் ஆகிய விவரங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தகவல் தெரிவிக்கப்படும்.
- ஈப்பு ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விவரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், https://tiruvarur.nic.in என்ற மாவட்ட இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.
- காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. மேலும் தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமை ஊராட்சி ஒன்றிய நியமனக் குழுவிற்கு உண்டு.

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், கொரடாச்சேரி
திருவாரூர் மாவட்டம்.

## கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம்

## திருவாரூர் மாவட்டம்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

# ஒன்றியத்தலைப்பு அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்

**(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 11-12-2023)**

(பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | | கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம்<br><br>(கையொப்பத்துடன்) |
| 2. | பாலினம் | ஆண்/ பெண்/ திருநங்கை | |
| 3. | விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | ஊராட்சிஒன்றியம்கொரடாச்சே ரி | |
| 4. | விண்ணப்பிக்கும் பதவி மற்றும் அலுவலகம் | அலுவலகஉதவியாளர் | |
| 5. | தந்தை / கணவர் பெயர் | | |
| 6. | நிலையான முகவரி<br>(ஒன்றியம்/வட்டம் , மாவட்டம்)<br>முழுவிவரத்துடன் | | |
| 7. | விண்ணப்பதாரர் திருவாரூர் மாவட்டத்தை சார்ந்தவரா? | (ஆம் / இல்லை) | |
| 8. | விண்ணப்பதாரரின் விபரம்<br>அ) தொலைபேசிஎண்<br>ஆ)கைபேசிஎண்<br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 9. | பிறந்த தேதி | DD / MM / YYYY | |
| 10. | விண்ணப்பதாரர் 01.07.2023 தேதியில் 18 வயது பூர்த்தி அடைந்தும், ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) – பெண்கள் ஆதரவற்ற விதவை-**37** வயதிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். | | |

<table>
<tr><td>11.</td><td>இனம்<br>(பொருத்தமானவற்றை<br>✓ செய்யவும்)</td><td><table><tr><td>General</td><td>BC</td><td>BC(M)</td><td>MBC</td><td>SC</td><td>SC(A)</td><td>ST</td></tr><tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr></table></td></tr>
<tr><td>12.</td><td>வேலைவாய்ப்பு பதிவு விபரம்<br>(இருப்பின்)</td><td><table><tr><td>பதிவுஎண்</td><td></td></tr><tr><td>பதிவுநாள்</td><td></td></tr><tr><td>புதுப்பிக்கப்பட<br>வேண்டிய நாள்</td><td></td></tr></table></td></tr>
<tr><td>13.</td><td>கல்வித்தகுதி</td><td></td></tr>
<tr><td>14.</td><td>மிதிவண்டி ஓட்ட தெரிந்தவரா?</td><td>ஆம்/இல்லை</td></tr>
<tr><td>15.</td><td>மதம்</td><td>இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவம் / பிற</td></tr>
<tr><td colspan="2">கீழ்கண்டசான்றுநகல்களை இணைத்துள்ளேன்</td><td>(பொருத்தமானவற்றை<br>✓செய்யவும்)</td></tr>
<tr><td>அ)</td><td>பள்ளிமாற்றுச் சான்றிதழ்</td><td></td></tr>
<tr><td>ஆ)</td><td>கல்வித் தகுதிச்சான்று</td><td></td></tr>
<tr><td>இ)</td><td>இருப்பிட சான்றிதழ்<br>(ஆதார் அட்டை/வாக்காளர் அடையாள அட்டை/ குடும்பஅட்டை/<br>வீட்டுவரி ரசீது)</td><td></td></tr>
<tr><td>ஈ)</td><td>சாதிச் சான்றிதழ்</td><td></td></tr>
<tr><td>உ)</td><td>முன்னுரிமைச்சான்று<br>(ஆதரவற்றவிதவைசான்று)</td><td></td></tr>
<tr><td></td><td colspan="2"><u>உறுதிமொழி</u><br><br>மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும், மேலும் என் மீது குற்றவியல் வழக்கு ஏதும் பதியப்படவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.<br><br>நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்</td></tr>
</table>

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொரடாச்சேரி என்ற முகவரிக்கு அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிவரை 11-12-2023 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைத்திட வேண்டும்.